# நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.

**முன்னிலை**: திருமதி. ப.கனிமொழி, எல்.எல்.எம்.,
நீதித்துறை நடுவர் எண்.1,
ஜெயங்கொண்டம்.

2026 ம் ஆண்டு ஜீலை மாதம் 10 ம் தேதி, வெள்ளிகிழமை
2057 திருவள்ளுவர் ஆண்டு பராபவ வருடம் ஆனி மாதம் 26 ஆம் நாள்
CC No.92/2019
(CNR No: TNAL070003362019)

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | : | அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர், ஜெயங்கொண்டம் காவல் நிலையம், குற்ற எண்: 204/2018. |

//எதிர்//

| | | |
|---|---|---|
| எதிரி | : | வின்சென்ட் (51/2026) த/பெ.ஆசீர்வாதம், மாதாங்கோவில் தெரு, எரவாங்குடி. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | குற்றம் சாட்டப்பட்டது | : | எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 304 (A) உ/இ 183, 177 MV Act ன் கீழ் | | |
| 2 | குற்றச்சாட்டு வனையப்பட்டது | : | எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 304 (A)ன் கீழ் | | |
| 3 | சம்பவம் நடந்த நாள் | : | 10.06.2018 | | |
| 4 | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் | : | 13.06.2018 | | |
| 5 | எதிரி/எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற நாள் | : | கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் | |
| | | | 5.06.2018 | 25.06.2018 (காவல் நிலைய பிணை) | |
| 6 | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 27.05.2019 | | |
| 7 | கு.வி.மு.ச பிரிவு 240(1)ன் கீழ் குற்றத்தின் சாராம்சம் குறித்து வினவப்பட்ட நாள் | : | 30.08.2019 | | |
| 8 | வழக்கின் சாட்சிகள் முதல் மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | | அ.சா.1 | 30.06.2026 | 30.06.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | | | அ.சா.2 | 06.07.2026 | 06.07.2026 |
| | | | அ.சா.3 | 06.07.2026 | 06.07.2026 |
| | | | அ.சா.4 | 07.07.2026 | 07.07.2026 |
| 9 | எதிரி/எதிரிகளிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய நாள் | : | 08.07.2026 | | |

இவ்வழக்கு 28.05.2019 அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு வந்து 10.07.2026ம் தேதி என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 திருமதி. C.இராஜேஸ்வரி அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.நரசிம்மன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும் கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.....

## தீர்ப்புரை

1. கடந்த 10.06.2018ம் தேதி சுமார் 19.00 மணிக்கு புகார்தாரரின் அண்ணன் சின்னப்பராஜீம், எதிரியும் TN 61 C 9964 என்ற TVS Super XL இருசக்கர வாகனத்தில் எதிரி இருசக்கர வாகனத்தை ஓட்ட புகார்தாரரின் அண்ணன் பின்னால் உட்கார்ந்துகொண்டு கல்லாத்தூரிலிருந்து எரவாங்குடி தார் சாலையில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வடவீக்கம் கல்லறை அருகே வரும்போது எதிரி இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்ததில் இருவரும் நிலை தடுமாறி கீழே விழுந்ததில் புகார்தாரரின் அண்ணனுக்கு தலை மற்றும் நெஞ்சில் அடிபட்டு இறப்பை ஏற்படுத்தியுள்ள எதிரியின் செய்கையானது இ.த.ச பிரிவுகள் 279, 304(A)ன் கீழ் தண்டிக்கப்படவேண்டியவர் என இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மேற்படி குற்ற அறிக்கையை பெற்ற இந்நீதிமன்றம் மேற்படி அறிக்கையை நன்கு பரிசீலித்து மேற்படி எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 304(A)ன் படி வழக்கினை கோப்பிற்கு எடுத்துக்கொண்டது.

3. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரிக்கு அரசு தரப்பினரால் ஆதாரமாகக் கொள்ளப்பட்டதும், கு.வி.மு.ச பிரிவு 207ன் படி உள்ளதுமான வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது.

4. ஆவணங்களை பரிசீலணை செய்ததின் பேரில் எதிரி மீது குற்றச்சாட்டு வனைவதற்கு போதிய ஆதாரங்கள் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதியதால் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 304(A)ன் கீழ் குற்றத்தின் சாராம்சம் குறித்து, விளக்கி வினவ எதிரி குற்றத்தினை மறுத்த காரணத்தினால் அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு வழக்க விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. புகார்தாரர் தரப்பில் குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 320ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு இந்த வழக்கில் உள்ள குற்ற பிரிவுகள் சமாதானம் ஆகாத குற்றம் என்பதால் இந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

6. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வாய்மொழி சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு அவர்கள் தரப்பில் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்:-**

7. அ.சா.1 டென்ஸ்ராஜ் தனது சாட்சியத்தில் சுமார் 8 வருடங்களுக்கு முன்பு ஒருநாள், தன் அண்ணனும் எதிரியும் இருசக்கர வாகனத்தில் வேலைக்கு சென்றுவிட்டு, வின்செண்ட் வண்டியை ஓட்ட தன் அண்ணன் பின்னால் அமர்ந்துக்கொண்டு வீட்டிற்கு திரும்பி கல்லாத்தூரில் இருந்து எரவாங்குடிக்கு வடவீக்கம் கல்லறை அருகில் வந்துக்கொண்டிருந்தபோது, திடீரென்று மாடு குறுக்கே வந்ததால், இருவரும் வண்டியிலிருந்து கீழே விழுந்துவிட்டார்கள் என்று தனக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தார்கள் என்றும், தான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது, தன் அண்ணனுக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது என்றும், வின்செண்ட்க்கு கையில் காயம் ஏற்பட்டது என்றும், தனது அண்ணனை 108 ஆம்புலன்ஸ் மூலம் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம் என்றும், பின்னர் மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம் என்றும், அங்கு சிகிச்சை பலனின்றி தன் அண்ணன் இறந்துவிட்டார் என்றும், இது சம்மந்தமாக தான் ஜெயங்கொண்டம்

போலீசார் தன்னை விசாரித்து, புகார் வாக்குமூலம் பெற்றார்கள் என்றும், நீதிமன்றத்தில் தற்போது தன்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் அ.த.சா.ஆ.1 தன்னுடையதுதான் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

8. அ.சா.2 அந்தோணிசாமி தனது சாட்சியத்தில், இந்த வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

9. அ.சா.3 மணிகண்டன் தனது சாட்சியத்தில், தன்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ.2 ஐ தன் சொந்த வேலையாக காவல் நிலையம் சென்றபோது போலீசார் கேட்டுக்கொண்டதால் தான் செய்து கொடுத்தேன் என்று சாட்சியமளித்துள்ளார்.

10. அ.சா.4 குணசேகரன் தனது சாட்சியத்தில், வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான காவல் உதவி ஆய்வாளர் திரு.காமராஜ் மற்றும் திரு. காவல் ஆய்வாளர்கள் திரு.வேலுசாமி மற்றும் திரு.ராஜ்மோகன் ஆகியரோர்களின் கையொப்பம் மற்றும் கையெழுத்து தனக்கு தெரியும் என்றும், இவ்வழக்கின் காலதாமத்தை தவிர்க்கும் பொருட்டு, அவர்கள் தயார் செய்து வைத்திருக்கும் ஆவணங்களின் அடிப்படையில் தான் அவர்களுக்காக கூடுதல் சாட்சியமளிக்கிறேன் என்றும், கடந்த 13.06.2018 ம் தேதி காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.காமராஜ் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது, தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூர் மருத்துவமனையிலிருந்து வரப்பெற்ற தகவலினைப் பெற்று, அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த சின்னப்பராஜ் என்பவர் அவசர சிகிச்சை பிரிவில் இருந்ததால் அவருக்கு உதவியாக இருந்த அவரது தம்பி டென்ஸ்ராஜ் என்பவரிடம் வாக்குமூலம் அ.த.சா.ஆ.3 பெற்று, நிலையம் வந்து நிலைய குற்ற எண் 204/2018, ச/பி.279, 337 இதச மற்றும் 183MV Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.4 பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் அன்பழகன், மணிகண்ணன் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வைமகசர் அ.த.சா.ஆ.5 மற்றும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.6 தயார் செய்துள்ளார் என்றும், பின்னர் இவ்வழக்கினை மேல் விசாரணைக்கு எடுத்தக்கொண்ட காவல் ஆய்வாளர் திரு,வேலுசாமி அவர்கள் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலானவர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர்

காயம்பட்ட சின்னப்பராஜ் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதால், இவ்வழக்கின் ச/பி.279,337 இதச மற்றும் 183MV Act லிருந்து ச/பி.279, 304(A) இதச r/w 183 MV Act ஆக பிரிவு மாற்றம் செய்து, சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை அ.த.சா.ஆ.7 தயார் செய்துள்ளார் என்றும், இறந்த சின்னப்பராஜ் என்பவரின் பிரேதத்தை தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூர் மருத்துவமனையில் சவக்கிடங்கின் முன் வைத்து, ஜெயங்கொண்டம் காவல் நிலைய காவலர் 421 திரு.முருகேசன் என்பவர் பிரேதத்தினை மருத்துவருக்கு அடையாளம் காட்ட, சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் ஆகியோர் முன்னிலையில் பிரேத விசாரணை நடத்தியும், வாக்குமூலம் பதிவு செய்தும், பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ.8 தயார் செய்துள்ளார் என்றும், சம்பவம் உண்மையென தெரியவந்ததால் எதிரியை 25.06.2018 ம் தேதி ஜெயங்கொண்டம் காவல் நிலையத்தில் எதிரியை கைது செய்து, நிலைய ஜாமீனில் விடுவித்துள்ளார் என்றும், விபத்தில் இறந்து சின்னப்பராஜ் என்பவரின் பிரேதத்தை பிணக்கூறாய்வு செய்த மருத்துவர் திரு.தமிழ்மணி என்பவரை விசாரணை செய்து, பிணக்கூறாய்வு சான்றிதழ் அ.த.சா.ஆ.9 பதிவு செய்துள்ளார் என்றும், இவ்விபத்தில் ஈடுபட்ட TN 61 C 9964 என்ற பதிவெண் கொண்ட TVS XL இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பி, மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.பிரபாகரன் என்பவரை விசாரணை செய்து, மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.த.சா.ஆ.10 பெற்று, அவரது வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், இத்துடன் விசாரணையை முடித்து 03.08.2019 ம் தேதி எதிரிகளின் மீது ச/பி..279, 304(A) இதச r/w 183 MV Act ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

11. எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் எதிரிக்கு பாதகமாக தோன்றும் சங்கதிகளைப் பொறுத்து கேள்வி கேட்கப்பட்டது. எதிரி சாட்சியத்தை மறுத்துரைத்தும், தமது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

12. இரு தரப்பு ஆவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்ததில், இவ்வழக்கிற்கு தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில், அரசு தரப்பில் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 304(A)ன் கீழும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா ? என்பதேயாகும்.

13. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டது.

**<u>தீர்வு</u>**

14. அரசு தரப்பில், கடந்த 10.06.2018ம் தேதி சுமார் 19.00 மணிக்கு எதிரி இருசக்கர வாகனத்தை ஓட்ட அ.சா.1ன் அண்ணன் பின்னால் உட்கார்ந்துகொண்டு கல்லாத்தூரிலிருந்து எரவாங்குடி தார் சாலையில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வடவீக்கம் கல்லறை அருகே வரும்போது எதிரி இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்ததில் இருவரும் நிலை தடுமாறி கீழே விழுந்ததில் அ.சா.1ன் அண்ணனுக்கு தலை மற்றும் நெஞ்சில் அடிபட்டு அவர் இறந்து போவதற்கு காரணமாக இருந்ததாக எதிரி மீது இந்த வழக்கானது முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

15. எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகள் வாய்மொழி சாட்சியமாக விசாரிக்கப்பட்டு சான்றாவணங்களாக அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.10 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

16. கடந்த 10.06.2018ம் தேதி சுமார் 19.00 மணிக்கு கல்லாத்தூரிலிருந்து எரவாங்குடி தார் சாலையில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வடவீக்கம் கல்லறை அருகே விபத்து ஏற்பட்டது என்பதும், அந்த விபத்தில் அ.சா.1ன் அண்ணனுக்கு தலை மற்றும் நெஞ்சில் அடிபட்டு இறந்துள்ளார் என்பதும் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. மேலும், எதிரி தரப்பில் எதிரியின் அதிகேவம் மற்றும் அஜாக்கிரதை குறித்து மட்டும் தான் ஆட்சேபனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

17. மேற்படி ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை நிரூபிக்கம் விதத்தில் அரசு தரப்பில் புகார் மனு அ.த.சா.ஆ.3 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.4 ஆகவும், பார்வை மகசர் அ.த.சா.ஆ.5 ஆகவும், மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.6 ஆகவும், சட்டப்பிரிவு மாற்று அறிக்கை அ.த.சா.ஆ.7 ஆகவும், பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ.8 ஆகவும், பிணக்கூறாய்வு சான்றிதழ் அ.த.சா.ஆ.9 ஆகவும், மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.த.சா.ஆ.10 ஆகவும், குறியீடு செய்யப்பட்டுள்ளது.

18. எனவே, இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயம் யாதெனில், எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி இந்த விபத்தினை ஏற்படுத்தினாரா? என்பதே ஆகும். அதுகுறித்து இந்நீதிமன்றம் பரிசீலனை செய்கையில், அ.சா.1 தனது சாட்சியத்தில், சுமார் 8 வருடங்களுக்கு முன்பு ஒருநாள், தன் அண்ணனும் எதிரியும் இருசக்கர வாகனத்தில் வேலைக்கு சென்றுவிட்டு, வின்சென்ட் வண்டியை ஓட்ட தன் அண்ணன் பின்னால் அமர்ந்துக்கொண்டு வீட்டிற்கு திரும்பி கல்லாத்தூரில் இருந்து எரவாங்குடிக்கு வடவீக்கம் கல்லறை அருகில் வந்துக்கொண்டிருந்தபோது, திடீரென்று மாடு குறுக்கே வந்ததால், இருவரும் வண்டியிலிருந்து கீழே விழுந்துவிட்டார்கள் என்று தனக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தார்கள் என்றும், தான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது, தன் அண்ணனுக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது என்றும், வின்சென்ட்க்கு கையில் காயம் ஏற்பட்டது என்று சாட்சியமளித்துள்ளார்.

19. அ.சா.2 தனது சாட்சியத்தில் இந்த வழக்கு சம்பவம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்று சாட்சியமளித்துள்ளார். பார்வை மகசர் சாட்சியான அ.சா.3 தனது சாட்சியத்தில் தன்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பத்தை தன் சொந்த வேலையாக காவல் நிலையம் சென்றபோது போலீசார் கேட்டுக்கொண்டதால் தான் செய்து கொடுத்தேன் என்று சாட்சியமளித்துள்ளார். அரசுதரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்கள் பிறழ்சாட்சிகளாக பாவிக்கப்பட்டுள்ளார்கள்.

20. அ.சா.1 முதல் அ.சா.3ன் சாட்சியங்களை பரிசீலனை செய்கையில் எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி இந்த விபத்தினை ஏற்படுத்தியதாக எந்த ஒரு சாட்சியத்தையும் முன் வைக்கவில்லை.

21. எனவே, அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாணவங்கள் வாயிலாக எதிரி மீது சாட்டப்பட்ட குற்றத்தை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, சந்தேகத்தில் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டுமென இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

22. முடிவாக எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 304(A)ன் கீழும் சுமத்தப்பட்ட குற்றத்தில் எதிரி **"குற்றவாளி இல்லை"** என்று தீர்மானித்து, எதிரியை கு.வி.மு.ச பிரிவு 255(1)ன் கீழ் **விடுதலை** செய்து இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

23. எதிரியால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிணைப் பத்திரத்தினை ரத்து செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

24. அரசு தரப்பில் இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அது குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைகள் நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 10ம் நாள் வெள்ளிகிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(Sd/-P.Kanimozhi)
நீதித்துறை நடுவர் எண்.1,
ஜெயங்கொண்டம்.

**<u>அட்டவணை : –</u>**
**<u>அரசு தரப்பு சாட்சிகள்:</u>**

அ.சா.1 – டென்ஸ்ராஜ்

அ.சா.2 – அந்தோணிசாமி

அ.சா.4 – மணிகண்ணன்

அ.சா.3 – குணசேகரன், காவல் ஆய்வாளர்

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:</u>**

அ.த.சா.ஆ.1 – புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து

அ.த.சா.ஆ.2 – பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து

அ.த.சா.ஆ.3 – புகார் வாக்குமூலம்

அ.த.சா.ஆ.4 – முதல் தகவல் அறிக்கை

அ.த.சா.ஆ.5 – பார்வை மகசர்

அ.த.சா.ஆ.6 – மாதிரி வரைபடம்

அ.த.சா.ஆ.7 – சட்டப்பிரிவு மாற்று அறிக்கை

அ.த.சா.ஆ.8 – பிரேத பரிசோதனை அறிக்கை

அ.த.சா.ஆ.9 – பிணக்கூறாய்வு சான்றிதழ்

அ.த.சா.ஆ.10 – மோட்டார் வாகன ஆய்வறிக்கை (TN 61 C 9964)

**அரசுத்தரப்பு சான்றுப்பொருட்கள்** : இல்லை

**எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருட்கள்** : இல்லை

(Sd/-P.Kanimozhi)

**நீதித்துறை நடுவர் எண்.1,**

**ஜெயங்கொண்டம்.**

//True Copy//

நீதித்துறை நடுவர் எண்.1,
ஜெயங்கொண்டம்.